<u>மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருவாடானை</u>

<u>அசல் வழக்கு எண். 83/2021</u>

PW2 – திரு. சிக்கந்தர் ஹாஜா மைதீன் நாள். 30.08.2024

(1969ம் ஆண்டில் 44வது பிரிவின்படி) திரு.தெ.மனிஷ்குமார், பி.எஸ்.சி., பி.எல் (Hons)., மாவட்ட உரிமையியல் நீதிபதி, திருவாடானை அவர்கள் முன்னிலையில், மாவட்ட உரிமையியல் நீதிமன்ற Bench clerk (இளநிலை உதவியாளர்) திருமதி.B.ராமு என்பவர் சாட்சியிடம் சத்தியபிரமாணம் கோரி அதனடிப்படையில் பதிவு செய்த வாக்குமூலம்.

<u>குறுக்கு விசாரணை</u>

1. 8ம் பிரதிவாதி அப்துல் ஜபாவிற்கு வாதியின் பெற்றோர்களால் கிரையம் எழுதிக் கொடுக்கப்பட்டது எப்போது என்றால் தெரியாது. 1, 3 பிரதிவாதிகள் 8ம் பிரதிவாதிக்கு கடன் கொடுத்துள்ளதாக சொல்லியுள்ளேன் என்றும், மேற்படி கடனுக்கு கடனுறுதி சீட்டு எதுவும் எழுதிக் கொடுக்கப்பட்டதா என்றால் அதைப்பற்றி தெரியாது. 8ம் பிரதிவாதி பத்திரத்தை ரத்து செய்து கொடுப்பதாக சொல்லி பஞ்சாயத்து வைத்தார் என்று சொல்லியுள்ளேன் என்றும், மேற்படி பஞ்சாயத்தில் யார் யார் கலந்து கொண்டார்கள் என்றும், வாதி, ஜவுபர் அலி, நான், யூசுப் அலி, 8ம் பிரதிவாதி, 10ம் பிரதிவாதி மற்றும் 9ம் பிரதிவாதி. மேற்படி பஞ்சாயத்து நடைபெற்றதற்கு முச்சலிக்கா எழுதப்பட்டதா என்றால் எழுதப்படவில்லை. யூசுப் அலி வாதிக்கு என்ன உறவுமுறை என்றால் நண்பர் ஆவார்.

2. 8ம் பிரதிவாதிக்கு கொடுக்கப்பட்ட கிரையப்பத்திரத்தை படித்து பார்த்துள்ளேனா என்றால் இல்லை. கிரையத்தை ரத்து செய்ய முடியாது என்பதை பற்றி தெரியுமா என்றால் தெரியாது. வாதிக்கும் எனக்கும் என்ன உறவுமுறை என்றால் நண்பர் ஆவார். 8ம் பிரதிவாதி தாவாசொத்துக்கள்

தொடர்பாக வாங்கிய கிரையப்பத்திரமானது சரியான பிரதிபலனுடன் வாங்கப்பட்டது என்றும், ரத்து செய்து தருகிறேன் என 8ம் பிரதிவாதி சொல்லவில்லை என்றும், மேற்படி கிரையப்பத்திரமானது கடனுக்காக எழுதப்படவில்லை என்று சொன்னால் சரியல்ல. அவ்வாறு கடனுக்காக கிரையப்பத்திரம் எழுதி வாங்கியிருக்க மாட்டார்கள் என்றும், கடனுறுதி சீட்டு தான் எழுதி வாங்கியிருப்பார்கள் என்றால் சரியல்ல. 8ம் பிரதிவாதியும், வாதியும் நெருக்கமானவர்கள் என்றும், 8ம்பிரதிவாதி வாதிக்கு வெளிநாட்டில் இருந்து பொருட்கள் வாங்கி கொடுப்பார் என்பது பொய் என்று சொன்னால் சரியல்ல. நான் சொல்வது போல் மேற்படி பஞ்சாயத்து எதுவும் நடக்கவில்லை என்று சொன்னால் சரியல்ல.

3. வாதியுடன் உள்ள நட்பின் காரணமாக அவர் கேட்டுக் கொண்டதற்கு இணங்க அவருக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

(ஓம்/திரு.தெ.மனிஷ்குமார்)

மாவட்ட உரிமையியல் நீதிபதி
திருவாடானை